திரு. ஆர். கருப்பையா : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் படிக்கின்றவர்களுக்கு புலவர் பட்டம் கொடுக்கப்படுகிறது. ஆனால் சென்னை பல்கலைக்கழகத்திலே நான்கு ஆண்டுகள் தமிழ் படித்தும் கூட வித்துவான் என்று வடசொல்லிலேதான் பட்டம் கொடுக்கிறார்கள். இனிமேலாவது இங்கே புலவர் என்ற பட்டம் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது இனி பரிசீலிக்கப்படும்.

தொழில் நுட்பப்பயிற்சி நிறுவன ஆசிரியர்கள்

*271 வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழக அரசு நடத்தும் தொழிற்பயிற்சி பள்ளிகளில் பணியாற்றும் எல்.எம்.இ. பட்டம் பெற்றவர்களுக்கும், certificate holderகளுக்கும் சம்பள விகிதத்தில் ஏதாவது வித்தியாசம் உண்டா ?

(இ) பி.எஸ்.ஸி. படித்து விட்டு இப்பள்ளிகளில் கணித ஆசிரியர்களாக பணி புரிபவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தில் ஒரே வகையைச் சேர்ந்த பதவிகளில் இருப்பவர்களில், சான்றிதழ் வைத்துள்ளவர்களுக்கும், எல்.எம்.இ டிப்ளொமோ பெற்றுள்ளவர்களுக்கும் சம்பள விகிதத்தில் எவ்விதமான வேறுபாடும் இல்லை.

(இ) பி.எஸ்.ஸி. பட்டம் பெற்று, கணித ஆசிரியராக இருப்பவர்களின் சம்பள விகிதம் ரூபாய் 125—5—175—102—25 ஆகும்.

திரு சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, பி.எஸ்ஸி. படித்து விட்டு கணித ஆசிரியர்களாக, தொழில் பயிற்சி நிறுவனங்களிலும் சரி, மற்ற உயர்நிலைப் பள்ளிகளிலும் சரி வருகிறார்களே, அதுபோல பி.ஈ. பாஸ் செய்துவிட்டு வருகிறவர்களை கணித ஆசிரியர்களாக எடுத்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கணிதம் படித்தவர்களுக்கு பி.எஸ்ஸி. பட்டம் தரப்படுகிறது.

திரு சி. கோவிந்தராசன் : கணித ஆசிரியர்கள் என்று அவர்களை எடுத்துக்கொண்டு, கணித ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பி.எஸ்ஸி. படித்தவர்கள் கணித ஆசிரியர்களாக இருக்கலாம். அவர்களுக்கு கணித ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்ற சம்பளம் கொடுக்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : Whereas the duration of the L.M.E. course is spread over three years and that of the Survey course is spread over one year, is there any disparity in the scales of pay if they are employed by the Government of Madras ? I am not concerned with the Government of India. The Hon. Minister in his answer has stated that there is no disparity in the scales of pay when they are employed by the Government of India. I want to know whether there is any disparity when they are employed by the Government of Madras ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய பட்டப்படிப்பு விவரமும், மற்றைய விவரங்களும் குறிப்பில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

1968 மார்ச் 21]

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in view of the prevailing unemployment among the B.Es. will the Government allow the B.E. graduates to sit for the B.SC. (Pass) examination so that they can qualify themselves and get appointments as teachers ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பி.ஈ. படித்தவர்கள் பி.எஸ்ஸியையும் படிக்க விரும்பினால் அதைப் பற்றி கவனிக்கலாம்.

PALAR WATER.

*272 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the steps taken by the Government to ensure more water-supply in Palar river from the Mysore State, the source of the river, and

(*b*) whether the Government will press for a just and reasonable river code to settle disputes ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தமிழகமும் மைசூர் மாநிலமும் 1892-ல் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, பாலாறு இரு மாநிலங்களினாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த உடன்படிக்கையின்படி தமிழகத்தின் நலனுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய புதிய அணைக்கட்டு எதையும் மைசூர் மாநில எல்லைக்குள் கட்டக்கூடாது. தமிழகத்திற்கு முறைப்படி சேர வேண்டிய தண்ணீர் குறைந்து விடுகிறது என்று கருதுவதற்கு எத்தகைய ஆதாரமும் இல்லை.

(இ)-(அ) பகுதிக்கான விடையின் காரணமாக, இவ்வினாக்கள் எழவில்லை.

திரு. கே. விநாயகம் : சென்னை மாநிலத்திற்கும், மைசூர் மாநிலத்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் இந்த ஆண்டு முடிகிறது. இந்த ஆண்டு முடிந்த பிறகு தாராளமாக ஓடிவருகிற வெள்ளத்தைத் தடுக்காமல் நமக்கு கொடுப்பதற்கு மைசூர் மாநிலம் தயாராய் இருக்கிறதா? பாலாறு அவ்வளவு அதிகமாகத் தண்ணீர் இருக்கிற ஆறு. அப்போதே அதிகமாக வெள்ளம் வந்திருக்க வேண்டுமே, அது தடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன ? பழைய மாதிரி வெள்ளம் வருவதற்கு இரண்டு சர்க்கார்களும் சேர்ந்து முயற்சி எடுத்து தண்ணீர் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1892-ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்ட ஒப்பந்தம். அதற்கு மீறி எந்தக் காரியத்திலேயும் மைசூர் அரசு ஈடுபடவில்லை. இது 50 ஆண்டுகள் ஒப்பந்தமாகும்.

திரு. நா. இருட்டிணன் : நெடுநாட்களாக மணல் ஆறாக இருக்கிற பாலாற்றினை நீர் ஆறாக மாற்றுகின்ற வகையிலே காவேரிப் படுகையில் நில அடிமட்ட நீர் வளத்தை அறிய ஆராய்ச்சியை நடத்தியதைப்போல் பாலாற்றுப் படுகையிலும் நடத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போதே ஊற்று தலைக்கால், ஊற்று வாய்க்கால் வழியின் மூலம் தண்ணீர் பெறுவதற்கு முயற்சிகள் நடந்துகொண்டு வருகின்றன. அதன் மூலம் தண்ணீர் பெறப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : பாலாறுபற்றி நீண்ட நாட்களுக்கு முன்னால் ஒரு உடன்பாடு இருந்தபோதிலும் இப்போது ஒரு உடன்பாட்டை நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி கொறடா அவர்களைக்கொண்டு அந்த மாநிலத்திலே இருப்பவர்களோடு பேசி, தண்ணீர் கொண்டுவரக் கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?